


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## நவம்பர் - 2019

We Are Here..!! To Guide You..!!



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## நவம்பர் - 29.11.2019

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**Weshine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- தமிழக நிகழ்வுகள்
- தேசிய நிகழ்வுகள்
- சர்வதேச நிகழ்வுகள்








We Shine Academy

# தமிழக நிகழ்வுகள்

- **ஏழு அறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு தலா ரூ.5 லட்சம் வீதம் ரூ.35 லட்சம் வழங்க தமிழ் வளர்ச்சித்துறை அரசாணை** வெளியிட்டுள்ளது.
  - தமிழக முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி கடந்த ஜூலை 20 ஆம் தேதி சட்டபேரவையில் விதி எண் - 11 இன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், தமிழறிஞர்களுக்கு புதிய விருதுகளையும் நிதியுதவிகளையும் வழங்கியது. இதுவரை 149 அறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கி, அவர்களை மரபுரிமையர்களுக்கு பரிசுத்தொகை வழங்கியுள்ளது.
  - **செய்தி துளிகள்**
    - அதனை தொடர்ந்து, உளுந்தூர்பேட்டை சண்முகம், கவிஞர் நா.காமராசன், முனைவர் இரா. இளவரசு, தமிழறிஞர் அடிகளாசிரியர், புலவர் இறைக்குருவனார், பண்டித ம.கோபாலகிருட்டிணன், பாபநாசம் குறள்பித்தன் ஆகியோரது படைப்புகள் அர்பணிக்கப்பட்டுள்ளனர்.

- **தமிழ்நாட்டில் உள்ள உணவு மிகவும் பாதுகாப்பற்றது என்று FSSAI அறிக்கை** கூறுகின்றது.
  - தமிழ்நாட்டில் 45மூ உணவு மாதிரிகள் தேவையான

தரங்களைப் பூர்த்தி செய்யவில்லை.

- தமிழ்நாட்டில் 12.7ளூ உணவு மாதிரிகள் கலப்படம் செய்யப்பட்டுள்ளன மற்றும் நுகர்வுக்குப் பாதுகாப்பற்றவை என இந்த அறிக்கை குறிப்பிடுகின்றது.

## தேசிய நிகழ்வுகள்

- நாடு முழுவதும் கிராமப்புறங்களில் 16.34 கோடி வீடுகளில் கழிப்பறை வசதி உள்ளது என்று நாடாளுமன்றத்தில் மத்திய ஜல் சக்தி துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் தெரிவித்தார்.
  - இதில் அதிகபட்சமாக, உத்தரபிரதேசத்தில் 2.84 கோடி வீடுகளிலும், பீகாரில் 1.59 கோடி வீடுகளிலும், மேற்கு வங்கத்தில் 1.37 கோடி வீடுகளிலும் கழிப்பறை வசதிகள் உள்ளன.
  - **செய்தி துளிகள்**
    - **ஸ்வச் பாரத் அபியனின் கீழ் ஒரு புதிய திட்டமாக பிரதா மந்திரி ஸ்வச் பாரத் யோஜனா, இலவச கழிப்பறை திட்டம் 2019 அறிவிக்கப்பட்டது** குறிப்பிடத்தக்கது.
    - இத்திட்டத்தின் முதன்மையான நோக்கம் கழிப்பறை இல்லாத வீடுகளில் கழிப்பறைகள் அமைப்பதாகும்.

We Shine Academy™

- இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கிடையே நடத்தப்படும் கூட்டுப் பயிற்சியின் **ஏழாவது பதிப்பான 2019 ஆம் ஆண்டின் "மித்ரா சக்தி"** என்ற பயிற்சியானது 2019 ஆம் ஆண்டில் **டிசம்பர் 01 முதல் 14 வரை புனேவில்** உள்ள வெளிநாட்டு பயிற்சி முனையத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.
    - மித்ரா சக்தி என்ற பயிற்சியானது இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளின் இராணுவ உறவுகள் மற்றும் இருநாட்டுப் படைகளுக்கு இடையேயான தொடர்புகள் ஆகியவற்றின் ஒரு பகுதியாக ஆண்டுதோறும் நடத்தப்படுகின்றது.

- இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையமானது **(Food Safety and Standards Authority of India – FSSAI)** விதிமுறைகளின் அமலாக்கம் குறித்த 2018 – 19 ஆம் ஆண்டிற்கான தரவை வெளியிட்டுள்ளது.
    - பாதுகாப்பற்ற, தரமற்ற மற்றும் பெயரிடல் குறைபாடுகள் ஆகியவற்றிற்காகத் தனித்தனியாகத் தொகுக்கப்பட்ட தரவுகளை வெளியிடுவது இதுவே முதல் முறையாகும்.
    - இதில் உத்தரகாண்ட், கோவா, பீகார், சிக்கிம், குஜராத் மற்றும் தெலுங்கானா உள்ளிட்ட பத்து மாநிலங்கள் ∴ஒன்றியப் பிரதேசங்கள் சிறப்பாகச் செயல்பட்டன என அறிவிக்கப்பட்டுள்ளன.
    - இதில் நாகாலாந்து, உத்தரப் பிரதேசம், தமிழ்நாடு, ஜார்க்கண்ட், ஜம்மு காஷ்மீர், ராஜஸ்தான் மற்றும் பஞ்சாப்

ஆகியவை மிகவும் மோசமாகச் செயல்பட்ட பத்து மாநிலங்களின் வரிசையில் உள்ளன.

## சர்வதேச நிகழ்வுகள்

- உலகளாவிய **வலையமைப்பின் கண்டுபிடிப்பாளரான டிம் பெர்னர்ஸ் லீ என்பவர் உலகெங்கிலும் உள்ள 80 நிறுவனங்கள் மற்றும் அரசாங்கங்கள்** ஆகியவற்றுடன் இணைந்து **இணையத்திற்கான ஒரு புதிய ஒப்பந்தத்தை அறிவித்துள்ளார்.**
    - அனைத்து பங்குதாரர்களுக்கும் ஒரு "சிறந்த" வலையமைப்பை உருவாக்குவதற்கு ஒரு உலகளாவிய செயல் திட்டத்தை உருவாக்குவதே இந்தக் கருத்தின் நோக்கமாகும்.
    - இந்த ஒப்பந்தமானது அரசாங்கங்கள், குடிமக்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு தலா மூன்று கொள்கைகள் என்று, மொத்தம் 9 கொள்கைகளைக் கொண்டுள்ளது.

## திருக்குறள்

**குறள் எண் : 32**

அதிகாரம் : அறன் வலியுறுத்தல்

குறள் பால : அறத்துப்பால்

குறள் இயல் : பாயிரம்

**அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை அதனை**



We Shine Academy TM

**மறத்தலின் ஊங்கில்லை கேடு.**

**விளக்கம்** : அறம் செய்வதை விட நன்மையும் இல்லை. அதை செய்ய மறப்பதைவிட கெடுதியும் இல்லை.

We Shine Academy™